# சம்ஸ்கிருத காவியவியலில் அணிக்கோட்பாடு - பரதநாட்டிய சாஸ்திரத்தை அடிப்படையாகக்கொண்டது.

சிறீகலா ஜெகநாதன்

சம்ஸ்கிருதத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

s.jeganathan1959@gmail.com

**சுருக்கம் :**

இலக்கியத்தைச் சுவைப்பதற்கு காரணமாய் அமைந்த அம்சங்களுள் அணியலங்காரங்கள் என அழைக்கப்படும். காவியக் கோட்பாட்டிற்கு மிகுந்த முக்கியத்துவமுண்டு. சம்ஸ்கிருத மொழியில் எழுந்த இலக்கிய விமர்சனக் கருத்துக்கள் பல்வேறு இலக்கியக் கோட்பாடுகளாலான ரசம், த்வனி, குணம் இவற்றைப் பற்றி பேசினாலும் அணிகளுக்கும் அதிகளவு முக்கியத்துவம் தந்துள்ளன. ஆனந்தவர்த்தனர் உருவாக்கிய த்வனிக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்ட நூல்களான காவியப்பிரகாசம், சாகித்தியதர்ப்பணம், சிருங்காரப்பிரகாசம் போன்ற நூல்களில் ரசம் அல்லது த்வனிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டாலும் இந்நூலில் பெரும் பகுதிகள் அணிகள் பற்றித்தான் பேசுகின்றன அணிகளைப் பற்றி மிக உயர்ந்த எண்ணம் இருந்ததால்தான் நாட்டிய சாஸ்திர ஆசிரியர் பரதர் குறிப்பிடும் நான்கு அணிகளிலிருந்து பிற்காலத்தில் நூற்றியிருபதுக்கும் மேற்பட்ட அணிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பரதருக்கு முற்பட்ட காலத்திலேயே அலங்காரங்களின் செல்வாக்கை வட மொழி இலக்கியங்களில் காணக்கூடியதாய் இருந்தாலும் அணிக்கோட்பாட்டின் பரிணாம வளர்ச்சியை நாட்டியசாஸ்திரத்தில்தான் காணக்கூடியதாயுள்ளது. நாட்டியத்தைப் பற்றிய நூலாயினும் பல இலக்கிய கோட்பாடுகளும் நாட்டிய சாஸ்திரத்தில் காணப்படுகின்றன. வடமொழியில் நமக்கு கிடைக்கின்ற காலத்தால் முற்பட்ட இலக்கிய விமர்சன நூல் பரதநாட்டியசாஸ்திரமே. பரதரால் கூறப்படும் அணிகள் யாவை? அவை பிற்கால அணியியலாளருக்கு எவ்வகையில் வழிகாட்டியாய் அமைந்தன என்பது பற்றி ஆராய்வது அவசியமாகும். பரதரால் கூறப்படும், உவமை போன்ற பொருளணிகளும் யமகம் போன்ற சொல்லணிகளும் இவ்வாய்விலே எடுத்து அவதானிக்கப்படுகின்றன. பரதரால் குறிப்பிடப்படும் லக்ஷணங்கள் என்ற தொகுதிக்குள் அடங்குவனவற்றுள் சில, பிற்கால காவியவியலாளர்களால் அணிகளாகவும் குணங்களாகவும் கூறப்படுகின்றன. யமகம் போன்ற அணிகள் ரசங்கள் பொருந்தியவையாய் காணப்படுகின்றன. பிற்கால அலங்காரக்கோட்பாட்டின் வளர்ச்சிக்கு நாட்டியசாஸ்திரத்தில் காணப்படும் அலங்காரங்களின் வகிபங்கு எத்தகையது என்பது இவ்வாய்வில் எடுத்து ஆராயப்படுகின்றது. நாட்டிய சாஸ்திரத்தின் பதினாறாம் அத்தியாயத்தில் வாசிக அபிநயத்தில் குறிப்பிடப்படும் அலங்காரங்கள் பற்றிய பகுதி முழுமையும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது. ஆய்வுக்குரிய பிரதான மூலங்களாக பரதநாட்டிய சாஸ்திரம், தண்டியின் காவியதர்சம், பாமஹரது காவிய அலங்காரம் போன்ற நூல்கள் அமைகின்றன. துணை மூலங்களாக அணிக்கோட்பாட்டுடன் தொடர்புடைய தமிழ், ஆங்கில ஆய்வுக்கட்டுரைகள் அமைகின்றன. பரதநாட்டிய சாஸ்திரத்தில் காணப்படும் அணிகள் விளக்கமாக எடுத்துக் கூறப்படுவதால் விபரணவியல் ஆய்வுமுறையாக கட்டுரை அமைந்துள்ளது. பரதர் சொல்லணி, பொருளணி என்ற பேதம் காட்டாவிட்டாலும் இருவகைப்பட்ட அணிகளையும் எடுத்துக் கூறுகின்றார். உவமையின் ஐந்து வகைகள் யமகத்தின் பத்து வகைகள், எடுத்துக் கூறப்படுகின்றன. அலங்காரங்கள் ரசங்களுக்கு எவ்வாறு பிரயோகமாகின்றன என்பது பற்றியும் எடுத்துக் கூறப்படுகின்றது.

**திறவுச்சொற்கள் -** தீபகம், யமகம், லக்ஷணம்.

## 1. அறிமுகம்.

பரதர் நாடகத்தைப் பற்றிய நூலை முதலில் எழுதினாரென்றாலும் சம்ஸ்கிருத காவியத்தைப் பற்றியும் அவர்தான் முதன்முதலாக சில இலக்கணங்களை வகுத்துத் தந்துள்ளார். நாட்டிய சாஸ்திரத்தின் பதினாறாம் அத்தியாயத்தில் நான்கு அலங்காரங்கள், பத்து குணங்கள், பத்து தோஷங்கள், முப்பத்தியாறு லக்ஷணங்கள் பற்றிக்

கூறப்பட்டுள்ளது. உவமை, ரூபகம், தீபகம், யமகம் என்ற நாலுவகை அலங்காரங்களையும் பத்துவகை யமகங் களையும் அவர் எடுத்துக் காட்டுகிறார். சொல்லணி, பொருளணி என்ற பேதம் பரதரால் காட்டப்படவில்லை. பிற்காலத்தில் தண்டி, உத்படர் போன்றோர் சொல்லணி, பொருளணி என்ற பேதத்தைக் காட்டியுள்ளனர். இவர் லக்ஷணங்கள் என்று கூறும் பகுதியில் பல பிற்கால கவிதையியலாளர்களால் அலங்காரங்கள் என்றும் குண ங்கள் என்றும் நோக்கப்பட்டுள்ளன. அணிக் கோட்பாட்டின் வளர்ச்சிக்கான ஆரம்ப படிநிலைகளை நாட்டிய சாஸ்தி ரத்தில் காணலாம்.

## 2. அணிகளின் சிறப்பு.

உண்மையைப் பேருணர்ச்சியுடன் இதயத்திற்கு உயிர்த்துடிப்பு குன்றாத வகையில் எடுத்துச் சொல்லுவது கவிதை. அக்கவிதைக்கு உயிர் நிலையாக விளங்குவது கற்பனை. கற்பனையைப் படைப்பதற்கு பெரிதும் உதவி யாக இருப்பது அணிகள். பாமஹர் என்ற அலங்காரக் கோட் பாட்டாளர், ''பெண்ணிற்கு முகம் அழகானதாக இருந்தாலும் ஆபரணங்கள் இன்றி சோபிக்காதது போல ரூபகங்கள் முதலிய அலங்காரங்கள் இன்றி கவிதை சோபிக்காது'' என்று எடுத்துக் கூறுகின்றார்[6]. ''மாடக்குச் சித்திரமும் மாநகர்க்கு கோபுரமும் ஆடமைத்தோனல்லார்க்கு அணியும் போல'' செய்யுளின் அழகிற்கு அழகூட்டுவது அணியென நன்னூல் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது[1].

## 3. பரதருக்கு முற்பட்டகால அணியியல்.

காலத்தால் முற்பட்ட வடமொழி இலக்கியமான ரிக்வேதத்தில் உவமை, ரூபகம், உத்பிரேக்ஷை, வியதி ரேகம், சிலேஷை, அநுப்பிராசம் என்ற அணிகள் காணப்படுகின்றன. உஷை பற்றிக் கூறும் ஒரு பாடல் "ஆண் பந்துக்களிடம் செல்லும் சகோதரனற்ற ஸ்த்ரி யைப் போல அவள் மேற்றிசைக்குச் செல்கிறாள். தன் கணவனை இன்புறுத்த விரும்பும் மனைவியைப்போல அழகிய ஆடையணிந்து புன்னகை செய்வது போல தன் எழிலைப் புலப்படுத்துகின்றாள்." உஷைக்குப் பல உவமைகளை அடுக்கிக் கூறும் மாலோபமையை இச்செய்யுளில் காணக்கூடியதாக உள்ளது [5]. ஆதிகாவ் யமான இராமாயணத்தில் மந்தாகினிவர்ணனை, வர்ஷ கால, சரத்கால வர்ணனைகள், சித்திரகூட, அசோகவன வர்ணனைகள் முதலியவற்றில் உவமை, ரூபகம், தற்குறிப்பேற்றம் முதலிய பொருளணிகளும் அனுப்ராசம், யமகம், முதலிய சொல்லணிகளும் காணப்படுகின்றன. யாஸ்கா் கி.மு700 - நிருக்தம் என்ற தமது நூலில் உவமையணிகளைக் குறிக்கும் சொற்களை எல்லாம் தொகுத்துள்ளார். கர்மோபமா, பூதோபமா, ரூபோமா, சித்தோபமா, லுப்தோபமா என்ற உவமையின் வகைகளைக் கூறுகிறார். இவரது லுப்தோபமா பிற்கால அணியியல் ஆசிரியர்களால் ரூபகம் என அழைக்கப் பட்டது. சம்ஸ்கிருதத்திற்கு இலக்கணம் வகுத்த பாணினி கி.மு 500 - உவமையின் உறுப்புக்களை சொல்லியி ருக்கின்றார். இவை நாட்டியசாஸ்திரத்திற்கு முன்னரேயே அணிகளின் தொன்மையையும் அவை இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்ட சிறப்பையும் விளங்கவைக்கின்றன.

## 4. உவமையணி

எல்லா அணிகளுள்ளும் பழைமைவாய்ந்தது உவமை யணி. உலகவழக்கிலும், இலக்கிய வழக்கிலும் மிக ஆட்சியுடையது உவமையணி. ஒரு உவமையால் ஒரு பொருளோடு மற்றைய பொருளை இயைபுபடுத்துதல் இயற்கை தூண்டுதல் மட்டுமன்றி அறிவு உணர்ச்சியின் அடிப்படையுமாகும். உவமை அணிகளுக்கெல்லாம் அடிப்படை.

''உவமையென்னும் தவலருங் கூத்தி
பல்வகைக் கோலம் பாங்குறப்புனைந்து
காப்பிய அரங்கில் கவினுறத் தோன்றி
யாப்பறி புலவர் இதயம் நீப்பறு மகிழ்ச்சி பூப்ப நடிக்குமே''

என்ற அப்பையா தீட்சிதரின் தமிழாக்கம் கவனிக்கத்தக்கது[4]. எல்லாவித அலங்காரங்களும் உவமையணியின் விஸ்தா ரங்களன்றி வேறு இல்லை. உபமா அலங்காரமே அலங்கார சாஸ்திரத்தின் பிராணன் என்று பழைய இலக்கண சாஸ்தி ரகாரர் சொல்லுகிறார்கள்." என்ற சுப்பிரமணிய பாரதியாரின் கூற்றையும் அவதானிக்கலாம் [3].

பரதர் குணம் தோற்றம் ஆகியவற்றில் சிறிதளவேனும் ஒன்றுக்கொன்று ஒத்திருத்தல் உவமை அணியாகும் என உவமைக்கு வரைவிலக்கணம் கூறுகின்றார் [7].

प्रशंसा चैव निन्दा च कल्पिता सदृशी तथा ।
या कश्चित्सदृशी ज्ञेया सोपमा पञ्चधा बुधैः ।। [7].

புகழ்தல் நிந்தித்தல், கற்பனை, ஒத்திருத்தல், சிறிதளவு ஒத்திருத்தல் என ஐந்து வகை உவமைகள் கூறுகிறார். ஒவ்வொரு வகை உவமை அணியையும் உதாரணங் களுடன் விளக்குகிறார்.

दृष्ट्वा तु तां विशालाक्षीं तुतोष मनुजाधिपः ।
मुनिभिः साधितां कृच्छ्रात्सद्धिं मूर्तमितीमवि ।। [7].

தவப்பேறு உடையவர்களால் இடையூறுகளின் பின்னர் அடையும் வெற்றியை ஒத்து விசாலமான கண்களையுடைய பெண்ணைக் கண்டு அரசன் மகிழ்ந்தான் என்று சொல்லுமிடத்து அது புகழ்தல் உவமையாகும். இந்தப் புகழ்தல் உவமையை காளிதாசர் ரகுவம்சத்தின் ஆரம்பத்தில் மிகவும் நேர்த்தியாகப் பயன்படுத்தியுள்ளார். ''சொல்லும் பொருளும் சேர்ந்திருப்பது போல உலகத்தின் தாய் தந்தையரான பார்வதியும் பரமேஸ்வரனும் சேர்ந்திருப்பவர்கள்.'' இங்கே சொல் பொருள் இரண்டும் இணை பிரியா பார்வதி பரமேஸ்வரனுக்கு ஒப்பிடப்படுகின்றன.[2]. அடுத்து நிந்தை உவமையைக் குறிப்பிடுமிடத்து. ''தீயால் பொசுக்கப்பட்ட மரத்தை தழுவும் கொடியுடன் குணங்களற்ற கொடியவனைத் தழுவும் பெண்ணை உவமிக்கிறார்''.

सा तं सर्वगुणैर्हीनं सस्वजे कर्कशच्छवमि् ।
वने कण्टकनिं वल्ली दावदग्धमवि द्रुमम् ।। [7].

மதம் பொழிவனவும் மந்த நடையுள்ளதுமான யானைகள் மலைகள் போல் விளங்குகின்றன என்று கூறுமிடத்து அங்கு கற்பனை உவமம் பிறக்கிறது.

क्षरन्तो दानसलिलं लालामन्थरगामनिः ।
मतङ्गजा वरिाजन्ते जङ्गमा इव पर्वताः ।। [7].

இன்று பிறரது உள்ளத்தை மகிழ்விக்க உன்னால் செய்யப்பட்ட செயல் அதி மானுடச் செயலை ஒக்கும் என்று கூறுமிடத்து சத்ருஸீ உவமம் பிறக்கிறது.

यत्त्वयाद्य कृतं कर्म परचित्तिानुरोधनिा ।
सदृशं तत्तवैव स्यादतमिानुषकर्मणः ।। [7].

''பூரண சந்திர முகமும், நீலோத்பல மலர்களின் இதழ்களையொத்த கண்களையுமுடைய எனது தோழி வந்துவிட்டாள் என்று கூறுமிடத்து கிஞ்சித் சத்ருஸீ உவமம் பிறக்கிறது.

सम्पूर्णचन्द्रवदना नीलोत्पलदलेक्षणा ।
मत्तमातङ्गगमना सम्प्राप्तेयं सखी मम ।।[7].

இந்த உவமைகள் ஒன்றுடன் ஒன்று ஒத்திருத்தல், ஒன்றுடன் பல ஒத்திருத்தல்,பலவற்றுடன் ஒன்று ஒத்திருத்தல், பலவற்றுடன் பல ஒத்திருத்தல் என பாகுபடுத்தப்பட்டுள்ளது. சந்திரனுடன் முகம் ஒப்பிடப்படும் போது ஒன்றுடன் ஒன்று ஒத்திருத்தலாகும்.

तुल्यं ते शशनिा वक्त्रमत्यिकेनैकसंश्रया । [7].

சந்திரனுடன் ஒளிர் பொருட்கள் ஒத்துள்ளன என்று கூறும் போது ஒன்றுடன் பல ஒத்துள்ளன.

शशाङ्कवत्प्रकाशन्ते ज्योतींषीति भवेत्तु या ।। [7].

பருந்து, வல்லூறு, மயில் முதலியவற்றோடு ஒருவனது கண் ஒப்பிடப்படும்போது அது பலவற்றுடன் ஒன்று ஒத்துள்ளது.

एकस्यानेकवषियिा सोपमा परकिीर्तति। ।
श्येनबर्हणिभासानां तुल्यार्थमतियिा भवेत् ।। [7].

யானைகள் முகிலுடன் ஒப்பிடப்படும்போது பல பலவற்றுடன் ஒத்திருத்தலாகும்.

एकस्य बहुभिः साम्यादुपमा नाटकाश्रया ।
बहूनां बहुभर्जि्ञेया घना इव गजा इति ।। [7].

பரதர் கூறும் உவமையணியை ஒத்தே பாமஹரும் உவமையை வரையறுத்தல் காணலாம். ''உவமிக்கும் பொருளில் ஏற்றத்தாழ்வுகள் இருப்பினும் ஏதேனும் சிறிதளவு உவமையில் ஒத்திருந்தால் ஒப்பு உவமை கூறலாம். மதியும் மடந்தையும் மகிழ்ச்சி தருதலால் உவமிக்கப்படுகிறது. எனவும் கூறுவர் [6].

காவியதர்ச ஆசிரியர் தண்டி புகழ்தல் நிந்தை என்ற உவமையணிகளுடன் மேலும் முப்பது வகை உவமையணிகளை கூறுகிறார். இவர் கி.பி ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். அலங்காரங்களை விளக்கி ஆழமான நூல் தந்தவர். உவமையணி, உம்மையுவமை, கருத்துவுவமை, மறுபொருளுவமை, இதர விதர உவமை, விலக்குவமை, எனப் பிற்காலத்தில் பல கிளைகளாக விரிந்தமையை அலங்கார சாஸ்திர நூலாசிரியர்கள் எடுத்துக் காட்டுகின்றனர். தொல்காப்பியத்தில் அணிகளைப்பற்றி பேசுகின்ற இடம் உவமவியல்தான் உவமவியலில் காணப்படும் கருத்துக்களைக் கொண்டுதான் பண்டைத் தமிழரின் அணிக்கோட்பாட்டை நாம் சரியாக அறியக்கூடியதாகவுள்ளது.

**5. தீபகம்.**

கவிதையிலே ஓரிடத்தில் இருக்கும் சொல் பலவிடத்தும் சென்று ஒரு பொருளை விளக்குமாயின் அது தீபகம் எனப்படும்.

பல்வேறு கருத்துக்களைத் தரும் சொற்கள் ஒரு வசனத்திலே பொருந்தி எல்லாவற்றையும் விளக்கினும் அது தீபகம் எனப்படும்.

नानाधकिरणार्थानां शब्दानां संप्रदीपकम् ।
एकवाक्येन संयुक्तं तद्दीपकमुच्यते ।। [7].

தீபக அணியை விளக்கணி என்றும் தமிழில் அழைப்பர். ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கு பலவிடங்களில் நின்று பொருளை விளக்குதல் போல் இவ் அணியும் கவிதையில் ஓர் இடத்தில் நின்று பலவிடத்தும் பொருளை விளக்கும் தன்மையுடையது. தீபகம் என்னும் அணியில் மாலோபமம் என்னும் உவமையின் அழகும் சேர்ந்துள்ளது. காளிதாசரது குமார சம்பவத்தில் தீபகத்தின் அழகு நன்கு எடுத்துக்காட்டப்படுமாறு ஒரு செய்யுள் காணப்படுகிறது. "ஒரு பெரிய சுடரைக் கொண்ட திரியால் ஒரு விளக்கும் கங்கைப் பெருக்கத்தால் வானத்து வழியும் இலக்கணத்தால் தூய்மையும் திருத்தப்பெற்ற வாக்கால் புலவனும் ஆகிய இம் மூன்றும் போல இமவான் உமாதேவியால் தூய்மையும் அழகும் பெற்று உய்ந்தான்." என்று கூறுமிடத்து தீபக அணிவருகின்றது [8]. பரதர் தீபகஅணியை விளக்க கீழ்வரும் பாடலைத் தந்துள்ளார். அன்னாங்களற்ற குளம் ,பூக்களற்ற மரம், வண்டுகளற்ற குளம், மக்கள் கூட்டமில்லாத உபவனம் இவை எல்லாம் வெறுமையானவையே. வெறுமை என்ற சொல் பலவிடத்து நின்று பொருள் விளக்குகிறது.

सरांसहिंसैः कुसुमैश्च वृक्षा मत्तैर्द्वरिफैश्च सरोरुहाणि।
गोष्ठीभरिद्यानवनानि चैव तस्मन्निनशून्यानि सदा क्रयिन्ते ।। [7].

தண்டி காவியதர்சத்தில் பதினேழு வகைத் தீபகங்களைக் குறிப்பிடுகின்றார் ஆதி தீபகம், குண தீபகம், க்ரியா தீபகம், ஆவிருத்தி தீபகம் முதலியன சிலவாகும்.

**6. யமகம்**

யமகத்தில் அசைகளும், ஒலிகளும் திரும்பத் திரும்ப வருகின்றன. முதன் முதலில் பத்து வகை யமகங்களைக் கூறியவர் பரதரே. இது ஆரம்பகால கவிதையியலாளர் மத்தியில் யமகங்கள் பெற்ற செல்வாக்கைக் காட்டுகின்றது.

पादान्तयमकं चैव काञ्चीयमकमेव च ।
समुद्गयमकं चैव वक्रिान्तयमकं तथा ।।
यमकं चक्रवालं च सन्दष्टयमकं तथा ।
पदादयिमकञ्चैव ह्याम्रेडतिमथापचि ।।
चतुर्व्यवसतिञ्चैव मालायमकमेव च ।
एतादृशवधिं ज्ञेयं यमकं नाटकाश्रयम् ।। [7].

பாதாந்தம், காஞ்சி, சமுத்க, விக்ராந்த, சக்ரவால, சந்தஸ்ட, பாதாதி, ஆம்ரேடிதா, சதுர்வியவஸ்திதம் மாலாயமகம் என்ற பத்து வகை யமகங்களை விளக்கியுள்ளார். ஒவ்வொரு யமகத்தையும் விளக்கி அவற்றுக்கு எடுத்துக்காட்டாக செய்யுளையும் விபரிப்பர். செய்யுளின் நான்கு பாதங்களின் அடிகளிலுள்ள அசைவுகள் ஒரே மாதிரியாக இருத்தல் பாதாந்த யமகமாகும்.

दनिक्षयात्संहृतरश्ममिण्डलं
दवीव लग्नं तपनीयमण्डलं ।
वभिातिताम्रं दविसूिर्यमण्डलं
यथा तरुण्याः स्तनभारमण्डलम् ।। [7].

நாள் முடிவில் தன் கதிர் மண்டலங்களைத் தன்னுள் அடக்கி விளங்கும் சூரியனின் தாமிர நிறமுடைய மண்டலம் விண்ணின் பொன் மண்டலம் போல் விளங்குகிறது. இதனால் இது இளம் பெண்ணின் பருத்த மார்பகத்தைப் போல் விளங்குகிறது.

பெண்ணின் பருத்த தனங்களுக்கு நாள் முடிவில் சூரிய கிரணங்களைத் தன்னுள் அடக்கும் பொன் வண்ண விண் மண்டலம் உவமிக்கப்படுகிறது. நான்கு பாதங்களின் அடியிலும் மண்டலம் என்ற சொல் காணப்படுவதுடன் சிருங்கார ரசமும் பொருந்த இக் கவிதை காணப்படுகிறது.

आदौ द्वौ यत्र पादौ तु भवेतामक्षरे समौ ।
सन्दष्टयमकं नाम वज्ञिेयं तद्बुधैर्यथा ।। [3].
पश्य पश्य रमणस्य मे गुणान्येन येन वशगां करोतिमािम् ।
येन येन हसिमेतदि्शनं तेन तेन वशगां करोतिमािम् ।। [7].

ஒவ்வொரு அடியின் தொடக்கத்திலும் இரு சொற்கள் திரும்ப வருதலால் இது சந்தஷ்ட யமகம். என் அன்புக்குரியவரின் குணங்களைப் பார். எந்த எந்த நற்குணங்களுடன் எனக்கு காட்சியளிக்கின்றாரோ அவற்றால் அவர் என்னைத் தன்வசப்படுத்துகின்றார்.

केतकीकुसुमपाण्डुरदन्तः
शोभते प्रवरकाननहस्ती ।
केतकीकुसुमपाण्डुरदन्तः
शोभते प्रवरकाननहस्ती ।। [7].

செய்யுளின் அரைப் பகுதி வேறுபட்ட கருத்துடன் மீண்டும் இரட்டித்தல் சமுத்க யமகமாகும். உன்னத, கர்வம் கொண்ட உயர்ந்த காட்டு யானை சாம்பல் வர்ண வெளிறிய தந்தத்தால் பிரகாசிக்கின்ற கேதகி மலரை ஒத்துள்ளது. யானையை ஒத்த உயர்ந்த காடுகள் சாம்பல் பூத்த வெளிறிய புஸ்பங்களால் பிரகாசிக்கின்றது.

ஒரு மெய்யெழுத்து பல்வேறு உயிரெழுத்துக்களுடன் கூடி வருதல் மாலா யமகமாகும்.

ललीबलीहलीमालीखेलीमालीसलीजली ।

खलोबलोऽबलोमालीमुसलीत्वाभरिक्षतु ।। [7].

உருளும் விழிகளும் தள்ளாடு நடையும் கொண்ட பலராமன் நம்மைக் காக்கட்டும்.

இந்த பாடலில் பல்வேறு உயிர் எழுத்துக்களுடன் லி என்ற மெய்யெழுத்து கூடிவருதலை காணக்கூடியதாக இருக்கிறது.

**7. லக்ஷணங்கள்**

பரதர் முப்பத்தாறு லக்ஷணங்களைக் குறிப்பிடுகிறார். யாப்புக்களையும் குணங்களையும் அலங்காரங்களையும் விளக்கியது போல இவற்றை அவர் விளக்கவில்லை. திருஷ்டாந்தம், மாலா, நிதர்சனம், ஹேது போன்றன சில லக்ஷணங்களாகும் வாசிக அபிநயத்தின் கீழ் தான் இந்த லக்ஷணங்கள் சொல்லப்படுகின்றன. இந்த லக்ஷணங்கள் பிற்காலத்தில் அலங்காரங்களாகவும் குணங்களாகவும் குறிப்பிடப்படுகின்றன. பூஷணம் அல்லது விபூஷணம் என்ற லக்ஷணம் அலங்காரத்தையும் குணத்தையும் உள்ளடக்கியதாகத் தெரிகின்றது.

षट्त्रशिल्लक्षणान्येव काव्यबन्धेषु नरि्दशित् । [7].

अलङ्कारैर्गुणैश्चैव बहुभिः समलंकृतम् ।

भूषणैरवि चत्िरार्थैस्तद्भूषणमति स्मिृतम् ।। [7].

மாலா என்ற லக்ஷணம் மாலா உவமை மாலா ரூபகம் என அலங்காரங்களாக பிற்கால காவியவியலாளர்களால் குறிப்பிடப்படுவது கவனிக்கத்தக்கது.

**8. பரதருக்குப் பிற்பட்ட அணியியலாளர்கள்**

பாமகர், தண்டி, மம்மடர், ருய்யகர், வித்யாநாதர், அப்பையா தீட்சிதர் போன்றோர் அலங்காரக் கோட்பாட்டா ளர்கனாக கருதப்படுபவர்கள். அலங்காரக் கோட்பாட்டை தனிக்கோட்பாடாக வளர்த்தெடுத்த முன்னோடிகளுள் பாமஹர் முதன்மையானவர். காவ்ய தர்ச ஆசிரியர் தண்டி தனது இரண்டாவது பரிச்சேதத்தில் 35 அர்த்த அலங்காரங்களையும் மூன்றாவது பரிச்சேதத்தில் யமகம் முதலிய சப்த அலங்காரங்களையும் விளக்குகிறார். சந்தஷ்டயமகம், பாதாந்தயமகம், பாதாதியமகம் போன்று நாட்டிய சாஸ்திரத்தில் காணப்படும் யமகங்களுடன் அவ்யபேதம், வ்யவபேதம், அத்யந்தம் பிரதி லோம யமகம் முதலியவற்றையும் தண்டி குறிப்பிடுகிறார். மம் மடரின் காவ்யப்ரகாசம் ஒன்பதாவது உல்லாசத்தில் சப்த அலங்காரங்களையும் பத்தாவது உல்லாசம் அர்த்த அலங்காரங்களையும் கூறுகிறது. அப்பையா தீட்சிதர் நூற் றிப் பதினைந்து அலங்காரங்களைக் குவல யானந்தத்தில் கூறுகின்றார். அணியிலக்கண நூல்கள் சொல்லணி பொருளணியென அணிகள் வகைப்படுத்தப்படுகின்றன. பொருளை அதிகம் போற்றாது சொற்களின் அமைப்புக்கும் ஓசை நயத்துக்கும் முதன்மை கொடுப்பவை சொல்லணிகள். சில அணிகள் சொல்லணியில் சேர்ப்பதா பொருளணியில் சேர்ப்பதா என்பதில் இலக்கண அறிஞரிடையே பெரும் கருத்து வேறுபாடும் உண்டு. சிலேடை என்ற அலங்காரத்தை சிலர் சொல்லணியாகவும் பொருளணியாகவும் கூறினர். பொருள் வெளிப்பாட்டில் அமையும் நுண்ணிய வேறுபாடுகள் தனித்தனி அணிகளாக பிற்காலத்தில் வெவ்வேறு ஆசிரியர்களால் வகைப்படுத்தப்பட்டன. பெயரால் ஒன்றித்துக் காணப்படும் அணி வெவ்வேறு விளக்கம் பெறுவதையும் காணமுடிகிறது. பரதர் பொருளணிகளையும் சொல்ல ணிகளையும் கூறியவரெனினும் அவற்றிடையே பேதத்தை அவர் காட்டவில்லை. அணிக்கோட்பாட்டிலிருந்தே வக்ரோக்தி கோட்பாடு முகிழ்த்தது. வக்ரோக்தி கோட்பாட்டின் ஆசிரியரான குந்தகர் பரதரது அலங்கார கோட்பாட்டினை நன்கு அறிந்திருந்தார் என கானே.பி.வி என்ற அறிஞர் சுட்டிக்காட்டுகின்றார் [9].

**9. ரசப்பிரயோகத்திற்கே அணிகள்.**

அலங்காரங்கள் குணங்கள் பற்றிக் கூறுமிடத்து அவை ரசத்துக்கு எவ்வாறு பிரயோகமாகின்றன என்பது பற்றியும் கூறுவர். வீர அற்புத ரசங்கள் உவமை ரூபக அலங்காரங்களையும், பீபத்ஸ,கருணை ரசங்கள் ரூபகம், தீபகம் முதலிய அலங்காரங்களையும் கொண்டி ருத்தல் வேண்டும் என்பது அவரது கருத்து. இங்கே பொருத்தப்பாடு என்ற ஔசித்யம் பேணப்படலையும் நாம் அவதானிக்கலாம். அலங்காரங்கள் ரசத்துடன் கூடிய னவாக இருத்தலை நாட்டியசாஸ்திரத்தில் பரதர் எடுத்துக் காட்டியுள்ளார்.

**10. முடிவுரை**

அலங்காரங்கள் காலத்தால் முற்பட்ட வேத இலக்கிய ங்களிலே காணப்பட்டாலும் கோட்பாடு ரீதியில் நாட்டிய சாஸ்திரத்தில் தான் பரிணாமம் பெற்றன சப்த அர்த்த அலங்காரங்கள் பரதரால் கூறப்பட்டாலும் அவற்றுக்கிடையே பேதம் காட்டப்படவில்லை. பத்து வகை யமகங்களை

முதலில் எடுத்துக் கூறியவர் பரதரே. பரதரால் கூறப்படும் தீபக அணி பிற்காலத்தில் த்வனிக் கோட்பாட்டிற்கு முதன்மையாக அமைந்தது என்று கருதப்படுகிறது. அலங்காரங்கள் ரசத்திற்கு பிரயோகம் அளவில் முக்கியத்துவம் பெறுகின்றன. லட்சணங்கள் என்று கூறப்பட்டன. சில பிற்காலத்தில் அலங்காரங்களாகவும் குணங்களாகவும் தோற்றம் பெற்றன.

**உசாத்துணை நூல்கள்.**

[1] ஆறுமுகநாவலர், "நன்நூல் காண்டிகையுரை" வித்தியாநுபாலன அச்சகம், சென்னை, 1955.

[2] காளிதாசர், ''ரகுவம்ச மஹாகாவ்யம", த லிட்டில் ப்ளவர் கம்பனி, 1952

[3] சுந்தரமூர்த்தி, இ. ''தமிழில் அணியிலக்கணநூல்கள்" சென்னை பல்கலைக்கழகம், சென்னை, 1972.

[4] ஜகந்நாதாராஜா, மு. "ஔசித்யவிசாரசர்ச்சா ராஜபாளயம்", 1989.

[5] ஜம்புநாதன் மா.ரா "ரிக்வேதம் தொகுதி 2" அலைகள் வெளியீட்டகம், 2004.

[6] Bhamaka, Kavyalankara, The Balamonorama Press Madras, 1956.

[7] . "Bharata, Natyasastra" , Madhusudani Ed.with Sanskrit commentary Banaras Hindu University, Varanasi, 1971.

[8] Kalidasa, "Kumarasambhavam" , Bombay, 1950.

[9] Kane, P.V. ,"History of Alankara Literature", Nirna yasagar Press, Bombay, 1910.